1978 மார்ச் 17]

திரு. துரைமுருகன் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார். நேற்றையதினம் இந்த அவையிலே மாண்புமிகு அங்கத்தினர் வின்சென்ட் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவரைப் பற்றி அவதூறாகப் பேசியிருக்கிறார்கள்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் ரூலிங் ரிசர்வ்ட் என்று சொல்லியிருக்கிறேன்.

திரு. துரைமுருகன் : தங்கள் ரூலிங் என்னவாயிற்று ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் ரூலிங் கொடுப்பேன்.

திரு. துரைமுருகன் : இன்னொரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். மன்னிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்கார்ந்து கொண்டே சத்தம் போட்டுப் பேசுகிறீர்கள்.

4. ஒழுங்குப் பிரச்சினை.

வானொலியில் எதிர்க்கட்சித் தலைவர் அவையில் கூறாததைக் கூறியதாகக் கூறியது குறித்து

*திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, நான் நேற்றைய பிரச்னையின் ஆழத்திற்குச் செல்ல விரும்பவில்லை. ஒன்றை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். நேற்றைய பிரச்சினை பத்திரிகையிலே வேறு மாதிரியாக வந்திருக்குமானால் அந்தப் பத்திரிகைகள் மீது உரிமைப் பிரச்சினை கொடுத்து, தங்களிடத்திலே நான், அது உரிமை மீறலா அல்லவா என்பதைக் கண்டறிகிற வாய்ப்பினை வழங்குவதற்கு எனக்கு வசதியாக இருந்திருக்கும். அதற்கு மாறாக, வானொலியிலே அந்தச் செய்தி வேறு விதமாகத் திரித்துக் கூறப்பட்டது. வானொலியின் மீது உரிமைப் பிரச்னை எழுப்ப வேண்டுமானால் நான் எந்தவிதமான ஆதாரங்களையும் கொண்டு வர முடியாது. நான் கேட்டதைத் தான் சொல்ல முடியும். ஆனால், தங்களுக்கிருக்கிற அதிகாரத்தைப் பயன்படுத்தி வானொலி நிலையத்திலிருந்து நேற்றைய 7 மணி சட்டமன்ற நடவடிக்கை என்கின்ற செய்தித் தொடரில் என்ன கூறினார்கள் என்று அந்தப் பிரதியைத் தாங்கள் பெற முடியும்.

வானொலியில் எதிர்க்கட்சித் தலைவர் அவையில் கூறாததைக் கூறியதாக கூறியது குறித்து

[திரு. மு. கருணாநிதி] [1978 மார்ச் 17

அதில் என்ன சொன்னார்கள் என்றால், திரு வின்சென்ட் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவர் பற்றி கூறிய ஒரு குற்றச்சாட்டுக்கு ஆதாரம் இல்லையென்று தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் அது அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கப்பட வேண்டுமென்று சபாநாயகரைக் கேட்டுக்கொண்டார். எதிர்க்கட்சித் தலைவருடைய வேண்டுகோளுக்கிணங்க அது அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கப்பட்டது என்று குறிப்பிடப்பட்டது. ஆனால், நடந்தது அதுவல்ல. நான் அந்தக் குற்றச்சாட்டை மறுத்தேன். நான் மறுத்தபொழுது தாங்கள் சொன்னீர்கள், அதற்குப் பிறகு தீர்ப்பளிக்கிறேன் என்று. நான் சொன்னேன், குற்றச்சாட்டை மறுத்தவுடன் அது நிரூபிக்கப்பட வேண்டும், அல்லது நிரூபிக்கப்படவில்லையென்ற சூழ்நிலை வந்தாக வேண்டும். இரண்டும் இல்லாமல் பத்திரிகையில் வந்தால் என் மீது தவறாகக் களங்கம் கற்பித்த நிலைக்கு நான் ஆளாவேன். அதற்கு என்ன வழி சொல்கிறீர்கள் என்று கேட்டேன். அதற்கு முதலமைச்சரவர்கள் எழுந்து, அவர்தான் தங்களைக் கேட்டுக் கொண்டார். இதுபற்றி தாங்கள் முடிவெடுக்கிற வரையில், முடிவெடுத்து அறிவிக்கிற வரையில், நண்பர் வின்சென்ட் அவர்கள் ஆதாரங்கள் தருகிற வரையில்—என்று நான் கருதுகிறேன், பத்திரிகையிலே வரவேண்டாம், அவைக் குறிப்பிலே ஏற வேண்டாம் என்று தங்களைக் கேட்டுக்கொண்டார் முதலமைச்சர். அதன்மீது தாங்கள் அப்படி ஒரு உத்தரவு தந்தீர்கள்.

அதற்கு மாறாக இந்தக் குற்றச்சாட்டு ஏதோ வெளியிலே வந்துவிட்டால் என்ன செய்வது என்று நான் தங்களைப் பார்த்து, பத்திரிகையிலே வரவேண்டாமென்று நான் கேட்டுக் கொண்டதைப் போலவும், பிறகு தாங்கள் சம்மதித்தது போலவும் வானொலிக்குச் செய்தி எழுதிய நிருபரோ அல்லது ஒலி பரப்பாளரோ நேற்று செய்தி வெளியிட்டிருக்கிறார்கள். இதை நான் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன்.

இது மத்திய சர்க்காருடைய விவகாரம். இதில் உரிமைப் பிரச்சினை, உண்டோ இல்லையோ எனக்குத் தெரியவில்லை. ஆதாரங்களைக் கேட்டுப் பெறுகிற அதிகாரம் உள்ள இடத்தில் தாங்கள் இருக்கிறீர்கள். இவை பற்றிய அதிகாரங்கள் தங்களுக்கிருக்கின்றன. ஆவன செய்ய வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படி வானொலி சொல்லியிருக்குமானால், தாங்கள் எழுத்து மூலமாகக் கொடுத்தால், அதை வைத்துக்கொண்டு அவர்களை விளக்கம் கேட்டு, அதற்குப் பின்னால் நான் தீர்ப்பளிக்கிறேன் என்று சொல்லி, 1978–79 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்—காவல் துறை, தீயணைப்புப் பணிகள் ஆகியவற்றின் மீது திரு. ஜேம்ஸ் அவர்களைப் பேசும்படி அழைக்கிறேன்.